# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● ஆகஸ்ட் 5, 2017 Weekly E-paper ● August 5, 2017


# 'வீணை வித்வானா' அப்துல் கலாம்?


● சுப.வீரபாண்டியன்


ஒருவரின் அடையாளத்தை அழிப்பதென்பது அவரது வாழ்வின் பொருளையே அழிப்பதற்குச் சமம். அதுதான் அப்துல் கலாம் மணிமண்டபத்தில் நடந்திருக்கிறது!

மறைந்த இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் மீது, என் போன்றவர்களுக்கு பெரிய மாயை ஏதும் இல்லை. அவர் பல சமரசங்களைச் செய்து கொண்டார் என்ற வருத்தமும் உண்டு. ஆனாலும், அவருக்கென்று ஓர் இடமிருக்கிறது. அந்த உரிய இடம் கூட இப்போது மறுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னால் குடியரசுத் தலைவர் பதவி வகித்த எவருக்கும் இல்லாத செல்வாக்கு, அப்துல் கலாமுக்கு மக்களிடையே இருக்கிறது. குறிப்பாக, இளைஞர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் அவரிடம் அப்படி ஓர் அன்பு வைத்திருக்கின்றனர். அவர் பெயரைக் குறிப்பிட்டால் போதும், மாணவர்கள் துள்ளி எழுந்து கைதட்டுகின்றனர். அப்படி ஒரு புகழ் அவருக்கு உள்ளது.

அதனால்தான், அவர் இறந்துபோன அன்று, எல்லாத் தரப்பு மக்களும் வருந்தினார்கள். கடைகள், பல ஊர்களில், தாமாகவே அடைக்கப்பட்டன. இவையெல்லாம் வியப்பான செய்திகள்தாம். அதே நேரத்தில், இறந்துபோன ஒரு மனிதருக்காக ஏழை, பணக்காரர், நல்லவர், கெட்டவர் எல்லோருமே வருத்தப்படுவதும், அனைத்துக் கட்சியினரும், மதத்தினரும் துயரம் கொள்வதும் ஒரு விதத்தில் ஆபத்தானது. எந்த ஒரு மனிதரும் எல்லோருக்கும் நல்லவராக இருக்க முடியாது. அப்படி இருந்தால், அவர் யாருக்குமே உண்மையாக இருக்கவில்லையா என்று ஐயம் கொள்ள இடம் உள்ளது.

இவையெல்லாம் ஒரு புறமிருக்க, இயல்பாகவே இஸ்லாமியர்களின் மீது பகை கொண்டுள்ள பாஜக, பிறப்பால் இஸ்லாமியரான அப்துல் கலாமை மட்டும் இப்படிக் கொண்டாடுவது ஏன் என்ற வினா எழுகிறது.

இப்போது கொண்டாடுவது இருக்கட்டும், அன்றே எப்படி அவரைக் குடியரசுத் தலைவர் ஆக்கினார்கள் என்னும் கேள்வியும் இருக்கிறது. அன்று அவர் பாஜகவினருக்குத் தேவைப்பட்டார். 2002 பிப்ரவரி குஜராத் படுகொலைகள் நடந்து முடிந்த நேரம் அது. அதே ஆண்டு ஜூலை மாதம்தான் அப்துல் கலாம் பதவி ஏற்கிறார். இஸ்லாமியர்களுக்குத் தாங்கள் எதிரானவர்கள் என்ற கறையைக் குறைத்துக் கொள்ள அன்று அவர் தேவைப்பட்டார். "பாருங்கள் ஒரு இஸ்லாமியரை நாங்கள், நாட்டின் மிக உயர்ந்த பதவியில் அமர்த்தியிருக்கிறோம்" என்று சொல்வதற்கு அது பயன்பட்டது.

அவர்களின் தேவையைக் கலாம் மிகப் பொருத்தமாக நிறைவேற்றினார் என்பதையும் நாம் ஏற்க வேண்டும். பதவி ஏற்பதற்கு முன், நேர்காணலில் அவர் சொன்ன வரிகள் "எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது...." என்று தொடங்கும் வரிகள்தாம்! கீதையின் வரிகள் என்று மக்களால் நம்பப்படும் வரிகள் அவை! குஜராத்தில் நடந்தவைகள் எல்லாம் நன்றாகவா நடந்தன என்று நம்மில் பலரும் கேட்கத் தவறிவிட்டோம்.

பதவிக்காலம் முடிந்த பின்னரும், ஈழச் சிக்கல், அணு உலை எதிர்ப்பு ஆகியனவற்றில் அவர் மக்களுக்கு ஆதரவாக இல்லை. வெகு மக்களின் அணு உலை எதிர்ப்புப் போராட்டத்தை எதிர்த்து, அரசுக்கு ஆதரவாகவே அவரின் குரல் ஒலித்தது.

எனவே, அப்துல் கலாம் என்னும் மனிதரைக் கொண்டாடுவது பாஜகவிற்குப் பல வகையிலும் உதவியாக இருந்தது, இருக்கிறது. அதனால்தான் மணிமண்டபம் கட்டி, அதனைத் திறக்க பிரதமர் மோடியே நேரில் வருகின்றார். அந்த மண்டபத்திலாவது, அவரின் முதன்மை அடையாளத்தைக் காட்ட வேண்டாமா? ஒரு குடியரசுத் தலைவரின் அல்லது அறிவியல் அறிஞரின் தோற்றம்தானே அங்கு இடம் பெற்றிருக்க வேண்டும்?

வீணை வாசிப்பது போன்ற ஒரு தோற்றம், அருகில் பகவத் கீதை புத்தகம் என்றால், எவ்வளவு பெரிய மோசடி இது! அவர் என்ன வீணை வித்வானா?? கேட்டால், அவருக்கு வீணை மீட்டத் தெரியும் என்றும், அதில் அவருக்கு ஈடுபாடு உண்டு என்றும் கூறுகின்றனர். அது உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் அதுவா அவரது அடையாளம்?

ஒரு வேளை, ராஜாஜிக்குப் புல்லாங்குழல் இசைப்பதில் பயிற்சியும், ஈடுபாடும் உண்டென்று வைத்துக் கொள்வோம். அதற்காக அவர் புல்லாங்குழல் இசைப்பது போல எல்லா இடங்களிலும் சிலை வைப்பது பொருத்தமானதாக இருக்குமா? பெரியாரைப் பெரியாராகவும், ராஜாஜியை ராஜாஜியாகவும் காட்டுவதுதானே நேர்மை? யாருடைய அடையாளத்தையும் அழிப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை.

கடைசியாக மோடியின் அறிவிப்பைப் பாருங்கள். ராமேஸ்வரத்திலிருந்து அயோத்திக்குத் தொடர்வண்டி விடப்படுமாம். அதாவது, இஸ்லாமியர்களே, நீங்கள் இனிமேல் உங்களின் மெக்கா, மதீனா பயணத்தைக் கைவிட்டுவிட்டு, காசி ராமேஸ்வரம் பயணத்திற்குத் தயாராகுங்கள் என்கிறார் மோடி! ●



ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## மாணவி வளர்மதியை விடுதலை செய்

**கு**ண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மாணவி வளர்மதியை விடுதலை செய்யக் கோரி, தமிழகம் முழுவதும், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள், கல்லூரி வாசல்களில் துண்டறிக்கைகளை வழங்கி வருகின்றனர்.

▸ சென்னை நந்தனம் ஆடவர் அரசுக் கல்லூரியில்...






▸ தாம்பரம் சென்னைக் கிருத்துவக் கல்லூரியில்...





*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ‘ஏமாற்றத்’ தெரிந்த பிரதமர்

**ப**தினைந்து லட்சத்திற்கு ஆசைப்பட்டு ஓட்டு போட்ட இந்திய ஏமாளிகளைப் பார்த்துச் சொல்கிறார் ஒரு பிரதமர் ‘‘ஏ டிஜிட்டல் இந்தியா ஹை! ஏ டிஜிட்டல் இந்தியா ஹை!’’

“ரேசன் அரிசிக்குக் குண்டு, கேஸ் மானியத்திற்குக் குண்டு... செத்துப் போனவர்கள் பாக்கியவான்கள். தவணை முறையில் சாகும் நாம் பரிதாபத்திற்கு உரியவர்கள்.’’ இணையத்தளத்தில் மதுக்கூர் ராமலிங்கம் இப்படி சொல்கிறார்.

இந்த குண்டுகள் மருத்துவக் கல்வி, நீட் தேர்வு, விவசாயம் என அனைத்திற்கும் பொருந்தும்.

இதைத்தான் பிரதமர் ஏ டிஜிட்டல் இந்தியா ஹை என்று சொல்லிக்கொண்டு திரிகிறார் போலும்.

எரிவாயு, மண்ணெண்ணெய் இவை இரண்டும் இன்றைய உலகின், குறிப்பாக இந்திய மக்களின் முக்கியப் பயன்பாட்டுப் பொருள்கள்.

எரிவாயுவுக்கு ஆதார் அட்டையை இணைக்க வேண்டும், மண்ணெண்ணெய்க்கு ரேசன் அட்டையில் ஆதார் அட்டையை இணைக்க வேண்டும்.

உங்களின் மானியத் தொகையை உங்கள் வங்கிக் கணக்கில் போடுகிறோம் என்றார் மோடி.

இப்பொழுது மாதம் தோறும் 4 ரூபாய் உயர்த்திக் கொண்டு எரிவாயு வழங்குவோம். அதுவும் 2018ஆம் ஆண்டு வரைதான். இன்னும் சில மாதங்கள் வரை. அதன் பிறகு எரிவாயு மானியம் ரத்துசெய்யப்படும் என்று மத்திய உணவு மற்றும் நுகர்வோர் துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

அடுத்ததாக மண்ணெண்ணெயை நிறுத்தப்போகும் வேலையில் இறங்கிவிட்டது மோடி அரசு.

கிராமங்களில் வாழும் மக்கள், குறிப்பாகப் பெண்கள் விளக்கு எரிக்கவும் சமையல் செய்யவும் மண்ணெண்ணெயைத்தான் பெரிதும் பயன்படுத்துகிறார்கள்.

நகர்ப்புறங்களில் அனைத்து வீடுகளிலும் எரிவாயுப் பயன்பாடுதான் என்று எண்ணிவிடக் கூடாது. மண்ணெண்ணெய்ப் பயன்பாடும் பெரும் அளவில் இருக்கிறது.

இப்படிப் பட்ட நிலையில் மக்களின் வாழ்வாதாரத்தை, வறுமையின் வலியை கொஞ்சமும் உணராத, மக்களை வார்த்தைகளால் நன்கு ஏமாற்றத் தெரிந்த பிரதமர் மோடியின் பா.ஜ.க. அரசு, கார்ப்பரேட் எண்ணெய் நிறுவனங்களுக்கு, அவை நினைக்கும் விலையை நிர்ணயம் செய்துகொள்ள அனுமதி வழங்கி சாமரம் வீசிக்கொண்டிருக்கிறது.




இது அப்பட்டமான சர்வாதிகாரம். மக்களை வதைத்து எந்த அரசும் நிலையாக இருந்ததாக வரலாறு இல்லை.

கையில் ‘வேல்’ வைத்துக்கொண்டு, வழியில் போவோர் வருவோரிடம் வழிப்பறி செய்யும் கொள்ளையனுக்கும் இந்த அரசுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?

## பொறுப்பாளர்கள் நியமனம்

**தி**ராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் வழிகாட்டுதலின் படி, தெற்கு மண்டலத் தலைவராக த.ஞானசேகரன், தெற்கு மண்டலச் செயலாளராக ஜெயம் பெருமாள், திண்டுக்கல் மாவட்டத் தலைவராக செ.தமிழினியன், செயலாளராக கு.ஆனந்தராஜ், பொருளாளராக வே.நடராசன், திண்டுக்கல் இலக்கிய அணி நகர அமைப்பாளராக பிச்சை மணி ஆகியோரை மாநில அமைப்புச் செயலாளர் (பொறுப்பு) தோழர் ப.புழேந்திரன் நியமித்துள்ளார்.

# பாஜகவின் தேசப்பற்றும் திராவிட நாடும்

● உமா

“உணரச் செய்தான் உன்னை – அவன்
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும்
உணரச் செய்தான் உன்னை” என்று திராவிடக் கவிஞர் பாரதிதாசன் உணர்த்தியதை, தமிழ்நாட்டின் எல்லைகளுக்கப்பாலும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். தாய் மொழி உயிர்த்திருப்பதன் அவசியத்தை, பிற மொழித் திணிப்பின் கேடுகளை, தேசிய இன உணர்வை, மாநில உரிமைகளை உணரவும், அதற்காக உரத்துக் குரல் கொடுக்கவும் தலைப்பட்டிருக்கின்றனர். தமிழகத்தின் அண்டை மாநிலங்களான கேரளாவும், கர்நாடகாவும் வெளிப்படையாக உரிமைக் குரல்களை எழுப்பத் தொடங்கியுள்ளன. மேலும் சில வட மாநிலங்களும் எப்போது வேண்டுமானாலும் வெடித்துக்கிளம்பும் கொதிநிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

இந்தியை அழித்த தமிழ்நாட்டுத் ‘தார்’, கர்நாடகாவிலும் தன் வேலையைத் தொடங்கியிருக்கிறது. இந்தித் திணிப்பை எதிர்க்கும் போராட்டங்கள் அங்கே வீறுகொண்டு எழுந்துள்ளன. இந்தி எழுத்துகள் தார் பூசி அழிக்கப்படுகின்றன. இந்தித் திணிப்பு எதிர்ப்பு இயக்கம் கர்நாடகாவில் கட்டப்பட்டு வருகிறது. முதல்வர் சித்தராமையா, இந்தி பேசாத மாநிலமான கர்நாடகாவில் இந்தியில் பெயர்ப்பலகைகள் தேவையில்லை என்று கூறியிருக்கிறார். இந்தித்திணிப்பு மாநில மக்களின் உரிமைகளைப் பறிப்பதாக இருக்கிறது என்றும் சொல்கிறார்.

இதில் என்ன முரண் என்றால், தமிழ்நாட்டில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சிதான், பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடம் என்றது... மத்திய காங்கிரஸ் அரசுதான் இந்தியை ஆட்சி மொழியாக்க முயன்றது...அன்றைக்குக் காங்கிரசை எதிர்த்துதான் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்தன...இன்றைக்கு அதே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கர்நாடக முதல்வர் சித்தாமையா இந்தித் திணிப்பை எதிர்க்கிறார். அப்படி ஒரு ‘நல்ல’ காலச் சூழலை மத்திய பாஜக அரசு உருவாக்கித் தந்திருக்கிறது. தென் மாநிலங்களில் – ‘திராவிட தேச’த்தில் – மீண்டும் மாநில உரிமை முழக்கம் புத்துயிர் பெறத் தொடங்கியிருக்கிறது.



2014, மே மாதம் மத்தியில் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசு பொறுப்பேற்றது முதலே, மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் குவிப்பதற்கான நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொண்டு வருகிறது. சங்பரிவார் கும்பல்களின் அடிப்படை செயல்திட்டமான ‘அகண்ட பாரத’த்திற்கு ஆழமான அடித்தளம் அமைக்க ஆர்எஸ்எஸ் ஏற்பாடு செய்த ஒப்பந்ததாரர்களே, மோடியும், அமித்ஷாவும். ஆரிய நாகரிகமே இந்தியாவின் கலாசார அடையாளம், இந்துத்துவமே இந்தியாவின் மதக்கோட்பாடு, இந்தியே இந்தியாவின் மொழி என்று நிறுவி, இந்தியத் துணைக்கண்டத்தை ‘பாரத வர்ஷ’மாக்கும் முறைகெட்ட வேலையை, அதிகாரத்தின் துணை கொண்டு செய்து வருகிறது பாசிச பாஜக அரசு.

அதன் ஒரு பகுதியாக இந்தித் திணிப்பையும், அதன் வழி சமற்கிருத மேலாண்மையையும் நிலைநாட்ட முயல்கிறது. மத்திய அரசின் திட்டங்களுக்குத் திட்டமிட்டு, சமற்கிருதத்தில் பெயர் சூட்டப்படுகிறது. தீன்தயாள் உபாத்தியாயா போன்ற ஆர்எஸ்எஸ் அடிப்படைவாத சித்தாந்திகளின் பெயர்களில் திட்டங்களும், சிறப்பு நாள்களும் அறிவிக்கப்படுகின்றன. மாநில அரசின் பங்களிப்புள்ள திட்டங்களிலும் இந்தி திணிக்கப்படுகிறது. இப்போது கர்நாடகாவில் நடப்பதும் அதுதான்.

அந்த மாநிலத்தின் மெட்ரோ ரயில் நிலையங்களில் இந்தியில் பெயர்ப்பலகைகளை வைத்துள்ளது ரயில்வே துறை. மெட்ரோ ரயில்களிலும் இந்தியை இடம்பெறச் செய்துள்ளனர். கன்னடமும், ஆங்கிலமும் இருக்கும்போது, தேவையற்ற இந்தியைத் திணிப்பது ஏன் என்ற கேள்வியுடன், கன்னட மக்கள் களத்தில் இறங்கிப் போராடத் தொடங்கியுள்ளனர். கர்நாடக ரக்சன வேதிகே என்ற அமைப்பு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னணியில் நிற்கிறது. அது மட்டுமின்றி, இந்தி பேசாத மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, மகாராட்டிரம் உள்ளிட்டவற்றின் மாநிலக் கட்சிகளைக் கொண்ட இந்தி எதிர்ப்பு முன்னணியை உருவாக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளது.

முதற்கட்டமாக மொழி உரிமை, தேசிய இன உரிமை, சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தித் திணிப்புக்கு எதிராகப் போராடிவரும் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பிற்கு கன்னட அமைப்பு அழைப்பு அனுப்பியிருக்கிறது. இந்த சந்திப்பு செப்டம்பர் 15ஆம் தேதி பெங்களூருவில் நடைபெற உள்ளது. தமிழ்நாட்டில், இந்தித் திணிப்பு எதிர்ப்பை அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றாகக் கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கர்நாடாக மாநில திமுக பொறுப்பாளர் திரு இராமசாமி மூலமாக திமுகவின் தலைமைக்கு செய்தி அனுப்பியிருப்பதாக, கர்நாடக ரக்சன வேதிகே அமைப்பின் மூத்த உறுப்பினர் சன்னீரப்பா தெரிவித்திருக்கிறார். மொழி உரிமைப் போராட்டத்தில் கரம் கோத்துச் செயல்பட திமுக எப்போதும் முன்னணியில் நிற்கும் என்பதை, திரு இராமசாமியின் வழியாக திமுகவும் உறுதிப்படுத்தியிருக்கிறது.



அஇஅதிமுகவுக்கும் அழைப்பு அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. தமிழகத்தின் ஒட்டு மொத்த உரிமைகளையும் மத்திய பாஜக அரசிடம் அடகு வைத்துத் தெண்டனிட்டுக் கிடக்கும் ஆளும் அதிமுக, மொழி உரிமையில் மட்டும் என்ன செய்துவிடப் போகிறது?

மகாராஷ்டிரா மாநிலத்தில் மாநில உரிமையைத் தீவிரமாகப் பேசி வரும் நவ நிர்மான் சேனாவின் தலைவர் ராஜ் தாக்கரேவுக்கும் செப்டம்பர் 15 கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. கர்நாடாகாவிற்கு, தமிழ்நாட்டுடன் காவிரி நதி நீர்ச்சிக்கல் இருப்பதைப் போன்று, மகாராஷ்டிராவுடன் நீண்டநாள்களாகத் தீராத எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது. ஆனாலும், இப்போதைய உடனடித் தேவை, மத்திய பாஜக அரசின் பாசிசப் போக்கை எதிர்ப்பதுதான் என்ற முடிவுக்குக் கர்நாடகா வந்திருக்கிறது என்பதையே, அங்கு நடைபெறும் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் காட்டுகின்றன.

மொழியே ஓர் இனத்தின் அடையாளம் என்பதை எப்போது ஒரு தேசிய இன மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்களோ, அடுத்தடுத்து ஒவ்வொரு கட்டுகளையும் வெட்டி எறிந்து, தன்னாட்சியை நோக்கி நகரத் தொடங்குவார்கள். கர்நாடகா அடுத்த கட்டத்திற்கு நகர்ந்திருக்கிறது. மாநிலத்திற்கென்று தனிக்கொடி வேண்டும் என்ற கருத்து அங்கே வலுப்பெறத் தொடங்கியிருக்கிறது. இதிலும் தமிழ்நாடு கர்நாடகத்திற்கு முன்மாதிரியாக இருப்பதை வரலாறு சொல்கிறது. அண்ணாவின் மறைவுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கலைஞர், மாநிலத்திற்குத் தனிக் கொடி வேண்டும் என்று மத்திய அரசிடம் வலியுறுத்தினார். இந்திய தேசியக் கொடி மேல்புறத்திலும், அதற்குக் கீழே வலது புறத்தில், தமிழ்நாடு அரசின் இலச்சினையும் பொறிக்கப்பட்ட ‘மாதிரி’ கொடியை, 1970ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் தேதி டெல்லியில் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் தமிழக

முதல்வர் கலைஞர் வெளியிட்டார். மாநிலங்களுக்குத் தனிக் கொடி என்பதைப் பரிசீலிப்பதாக பிரதமர் இந்திராகாந்தியும் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்திய ஒன்றியத்தை ஒரு மொழி, ஒரு கொடியின் கீழ் கொண்டுவர, தேசிய கீதம், பாரத் மாதாகீ ஜே, வந்தே மாதரம், தேசப்பற்று..எனப் பல உத்திகளையும் சங்பரிவார் கும்பல்கள் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன. அதேநேரம், பாஜகவின் அதிகார பலத்தால், பற்ற வைக்கப்படும் தேசப்பற்று பற்றி எரிய எரிய, அந்த வெப்பத்தில் மாநில உரிமைகள் வெடித்துக் கிளம்புவதையும் பார்க்க முடிகிறது.

கடந்த ஆண்டு, கேரள மாநிலத்தின் பாரம்பரிய பண்டிகையான ஓணம் திருநாளை, பாஜக தலைவர் அமித்ஷா ‘வாமன ஜெயந்திக்காக்கி வாழ்த்துத் தெரிவித்தார். தங்களின் நல்வாழ்வுக்காகத் தன்னையே தியாகம் செய்த தங்கள் மன்னன் மாவலியின் வருகையைக் கொண்டாடும் நன்றிமிகுந்த பண்டிகையைக் கொச்சைப்படுத்திய பாஜகவிற்கு எதிராகக் கேரள மக்கள் கொதித்தெழுந்தனர். நாங்கள் ‘திராவிடர்கள்’ ஆரியப் பண்டிகைகளைக் கொண்டாட மாட்டோம் என கேரளம் உரத்து முழங்கியது. சமூக வலைத்தளங்களில், திராவிட நாடு ஹேஷ்டேக் முதல் இடத்தைப் பிடித்தது. கேரள மக்களின் உணர்வுகளைப் புண்படுத்திய அமித்ஷா மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றார் முதல்வர் பினராய் விஜயன். திராவிட நாடு முழக்கம், ஆரியத்தை குலை நடுங்கச் செய்தது. மன்னிப்புக் கேட்டார் அமித்ஷா,, பதற்றத்தைத் தணிக்க, அவருடைய கூட்டாளி, பிரதமர் மோடி, ஓணம் கொண்டாடினார்.

தமிழ்நாட்டில் திமுக மாநில உரிமைகளை மீட்டெடுக்கவும், பாஜகவின் மதவாத அரசியலை முறியடிக்கவும் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. இணக்கமான கொள்கைகளை உடைய கட்சிகளை, மாநில அளவிலும், தேசிய அளவிலும் ஒன்று திரட்டி வருகிறார், திமுக செயல்தலைவர் மு.க.ஸ்டாலின். பிரிவினைவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது, ‘திராவிட நாடு கோரிக்கையை இப்போது கைவிடுகிறோம். ஆனால் அதற்கான காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன’ என்றார் பேரறிஞர் அண்ணா. காரணங்கள் வலுப்பெற்றுக் கொண்டே வருகின்றன. இந்தித் திணிப்பு எதிர்ப்பை நோக்கிக் கேரளமும், திராவிட நாடு முழக்கத்தை நோக்கி கர்நாடகமும், இந்த இரண்டையும் நோக்கி ஆந்திரமும் வரும் காலம் வெகு தொலைவில் இல்லை. ●




# தொட்டால் தமிழ் மலரும்

● சிவதி

நண்பரின் திறன் பேசியில் குறுஞ் செய்தி அறிவிப்புக்கான ஒலி விடாமல் ஒலித்தது. அவரும் அதைத் திறந்து பார்ப்பதாக இல்லை.

செல்போனை வெறுப்புடன் பார்த்துவிட்டு, அவரே அலுப்புடன் சொன்னார். ’எனக்கு வரும் குறுஞ் செய்திகள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் தான் வருகின்றன. சில சொற்களுக்கு பொருள் விளங்கவில்லை. ஒவ்வொரு முறையும் அகராதிக்குச் சென்று பார்க்கவும் சோம்பலாக இருக்கிறது? தீர்வுதான் சொல்லேன் என்றார்.

“இதற்குப் போய் அலுத்துக் கொள்ளலாமா? திறன்பேசியில்தான் அகராதி இருக்கிறதே. தேடிப்பிடித்து தெளியலாமே” என்றேன். ஒவ்வொரு முறையும் இணையத்தை நாடவேண்டியுள்ளது. அந்த அளவுக்கு எல்லாம் எனக்கு பொறுமையில்லை என்றார்.

இல்லை.. இல்லை... இணையமில்லாமல் எந்த ஆங்கிலச் சொல்லுக்கும் பொருள் தெரிந்து கொள்ளலாம். அதுவும் இமைப்பொழுதில் என்றேன். ஆச்சரியத்தில் கண்கள் விரித்தார்.

ஆம். நண்பரிடத்தில் சொன்னதைத்தான் உங்களிடத்திலும் சொல்ல வருகிறேன். நமக்கு வரும் ஆங்கில குறுந்தகவல்கள் அனைத்தும் உங்களுக்குப் புரியாத சொற்கள் இருக்குமாயின் இனி எந்தத் தடுமாற்றமும் இல்லை. உங்கள் செல்பேசியில் Play Store செல்லுங்கள். U Dictionary




என்ற செயலியினைத் தரவிறக்கம் (Download) செய்து கொள்ளுங்கள். 38 மொழிகளின் அகராதியினை வழங்கியிருக்கிறார்கள். அதில் தமிழைத் தேர்வு செய்யுங்கள். அவ்வளவே.

இனி நமக்கு வரும் செய்தி, மின்னஞ்சல், வாட்ஸ்ஆப் செய்தி எதுவாக இருக்கட்டும். எந்தச் சொல்லின் பொருள் வேண்டுமோ அதனை தேர்வு செய்து Copy மட்டும் செய்யுங்கள். உடனடியாக அச்சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் திரையில் காண்பீர்கள்.

பல வியப்புகளை நிகழ்த்தும் இச்செயலி வெறும் 5 எம்.பி. தரவுகளை மட்டுமே கொண்டுள்ளது. இதனை நிறுவ மிகச்சிறிய நினைவகம் போதுமானது. அது மட்டுமல்ல, இந்த தமிழ் மின்னகராதியினை பயன்படுத்த இணையமே தேவையில்லை என்பதுதான் சிறப்புச் செய்தி.

நம் ஆங்கில மொழித்திறனை மேம்படுத்திக் கொள்ள, ஒவ்வொரு நாளும் ஒரு புதிய சொல்லைத் தேர்வு செய்து, அதன் பயன்பாடு குறித்து விவாதிக்கிறார்கள். நாள் தோறும் மொழித்திறன் மேம்படுத்த Spelling Check, Conversation practice, சொற்புதிர் விளையாட்டு எனப் பல பயிற்சிகள் இதில் உள்ளடங்கியுள்ளன.

இச்செயலி நாம் பேசினால் ஒலியை உணர்கிறது. ஆங்கிலத்தில் சொன்னால் போதும், கணப்பொழுதில் அதற்கு இணையான தமிழ்ச்சொல்லை தேடித்தரும். நீங்கள் முக்கியம் என்று கருதும் சொற்களை தனியே ஒரு Folder™ சேமித்தும் வைக்கலாம்.

இணையமில்லாமல் அகராதி பயன்படுத்தவும், வேறெந்த புதிய தளத்திற்கும் செல்லாமல் அதே திரையில் பொருள் அறிய மிகச்சிறந்த செயலி. இணையத்தோடு பயன்படுத்தும் போதும் இன்னும் பல கூடுதல் வசதிகள் உள்ளன.

பல வகையான அகர முதலியில் பொருள் காண முடிகிறது. இதிலிருந்து விக்கிபீடியாவிற்கும் சென்று அது தேர்வு செய்த பொருள் தொடர்பான கட்டுரைகளை வாசிக்கலாம். இச்செயலி நிச்சயமாகப் பயனளிக்கும். உடனே தரவிறக்கம் செய்து பயன்படுத்திப் பாருங்கள்.

https://play.google.com/store/apps/details?id=com.youdao.hindict ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.